# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1805/34 - 2013 අප්‍රේල් මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.04.11

*1805/34 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 24/51* (vi)

### (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 3 ஆம் மற்றும் 191 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
*2013, ஏப்பிறல் 11.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (உயர் என்ஜின் கொள்ளளவைக் கொண்ட மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2012 ஆம் ஆண்டின் 18 ஆந் திகதிய 1758/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 450 சீசீ அல்லது அதற்குக் குறைவானதும் 1001 சீசீ க்கு மேற்படாததுமான என்ஜின் கனக் கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் சைக்கிளொன்று பின்வரும் தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருப்பின் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படலாம் :-

(அ) உள்நாட்டில் கோத்திணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்டதாயினுஞ்சரி, புதிய ஆக்கக்கூறுகளைப் பயன்படுத்துதல் ;

(ஆ) விளையாட்டுக்கள் தொடர்பிலான செயற்பாடுகளுக்காகவும் விளையாட்டுக்கள் தொடர்பிலான நிகழ்ச்சிகளுக்கான பயிற்சிக்காகவும் மட்டும் பயன்படுத்துவதற்காக ;

(இ) பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முன்னங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் ;

(ஈ) சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏற்புடையற்பாலனவான இயைபான கட்டணங்களையும், மிகைக் கட்டணங்களையும், வேறு விதிப்பனவுகளையும் கொடுப்பனவு செய்வதன்மேல் .

இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காகச் "சட்டம்" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம் என்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்றும் பொருளாகும்.

3. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதிக்கு முன்னர், 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் குறித்துரைக்கப்பட்டவையும், உள்நாட்டில் கோத்திணைக்கப்படுகின்றவையும் அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்றவையுமான மோட்டார் சைக்கிள்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*04- 832/1*

---

*ச. வ. பீ. 24/51* (vi)

## (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ மற்றும் 213 உ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
*2013, ஏப்பிறல் 11.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (மிகைக் கட்டண) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆணையாளர் தலைமையதிபதி, உள்நாட்டில் கோத்திணைக்கப்படுகின்ற மோட்டார் சைக்கிள்களுக்கும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் சைக்கிள்களுக்கும் பின்வருமாறு மிகைக் கட்டணமொன்றை விதித்தல் வேண்டும் :-

(அ) 450 சீசீ அல்லது அதற்கு மேற்பட்ட மற்றும் 1001 சீசீ அல்லது அதற்குக் குறைவான என்ஜின் கனக் கொள்ளளவைக் கொண்டுள்ளவை ;

(ஆ) ஒரு மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 25,000.00.

3. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதிக்கு முன்னர், 2 ஆம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியின் கீழ் குறித்துரைக்கப்பட்டவையும், உள்நாட்டில் கோத்திணைக்கப்படுகின்றவையும் அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்றவையுமான மோட்டார் சைக்கிள்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*04- 832/2*

---

*ச. வ. பீ. 24/51* (vi)

## (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
*2013, ஏப்பிறல் 11.*

*ஒழுங்குவிதிகள்*

*1983 ஆம் ஆண்டு யூன் மாதம் 3 ஆந் திகதிய 248 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையும், 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதிய 1758/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானவையுமான 1983 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (வாகனத்தைக் கட்டியமைத்தல்) ஒழுங்குவிதிகள், அவற்றின் 3 ஆம் ஒழுங்குவிதியின் 2 ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :-*

*"(ஆ) ஒரு மோட்டார் சைக்கிளின் என்ஜின் கனக் கொள்ளளவு 450 கன சென்றி மீற்றர்களை (சீசீ) விஞ்சுதலாகாது ;*

*ஆயின், எவ்வாறாயினும், விளையாட்டுக்கள் தொடர்பிலான செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிளின் என்ஜின் கனக் கொள்ளளவு 450 சீசீயை விஞ்சலாம் ஆனால், 1001 சீசீயை விஞ்சுதலாகாது ;*

*ஆயின், மேலும், மேலேயுள்ள காப்புவாசகத்திற் குறித்துரைக்கப்பட்ட என்ஜின் கனக் கொள்ளவு, இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதிக்கு முன்னர் உள்நாட்டில் கோத்திணைக்கப்பட்ட அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டவொரு மோட்டார் சைக்கிளுக்கு மட்டுமே ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.".*

*04- 832/3*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*